செ.வெ.எண்.81 நாள்.27.10.2017.

திருநெல்வேலி மாவட்டம், கூடங்குளம் அணுமின் நிலைய பகுதியில் வளாகம் தாண்டிய அவசர நிலை பேரிடர் மேலாண்மை ஒத்திகை நிகழ்ச்சி, அவசர நிலை நிர்வாக குழு தலைவர் / மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

--------

திருநெல்வேலி மாவட்டம், கூடங்குளம் அணுமின் நிலைய பகுதியில் வளாகம் தாண்டிய அவசர நிலை பேரிடர் மேலாண்மை ஒத்திகை நிகழ்ச்சி, அவசர நிலை நிர்வாக குழு தலைவர் / மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (27.10.2017)நடைபெற்றது. செட்டிகுளம் அணு விஜய் நகரியத்திலுள்ள பேரிடர் மேலாண்மை கட்டுப்பாட்டு அலுவலகத்திலிருந்து விபத்து ஒத்திகை தொடர்பான கட்டளைகள் பல்வேறு பகுதிகளுக்கு தெரிவிக்கப்பட்டு, பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு, இடமாற்றம் செய்யும் நிகழ்வுகள் நடைபெற்றது.

பின்னர், ஒத்திகை தொடர்பாக மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது–

இந்திய அணுசக்தி ஒழுங்குமுறை ஆணையத்தின் அறிவுரைகளின்படி, இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை பேரிடர் மேலாண்மை ஒத்திகை நிகழ்ச்சி நடத்தப்பட்டு வருகிறது. இன்று கூடங்குளம் அணுமின் நிலைய பகுதியில் வளாகம் தாண்டிய அவசர நிலை பேரிடர் மேலாண்மை ஒத்திகை நிகழ்ச்சி இன்று நடைபெற்றது. அணுமின் நிலையங்களில் விபத்து ஏற்பட்டால் அவசர காலங்களில் எப்படி செயல்படுவது என்பது குறித்து ஒத்திகை நடைபெற்றது.

கூடங்குளம் அணுமின் நிலைய அவசர நிலை காலை 7.15 மணிக்கும், வளாகம் அவசர நிலை காலை 7.46 மணிக்கும் கூடங்குளம் அணுமின் நிலைய வளாகத்தில் கூடங்குளம் அணுமின் திட்ட வளாக இயக்குநர் திரு.எஸ்.வி.ஜின்னா அவர்களால் அறிவிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, காலை 9.10 மணிக்கு வளாகம் தாண்டிய அவசர நிலை கிரேட்–1ஐ மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் அறிவித்தார். அணுமின் நிலையத்திலிருந்து காற்று வீசும் திசையில் உள்ள பரமேஸ்வரபுரம் பகுதிக்கு காவல் துறை, தீயணைப்புத் துறை, சுகாதாரத் துறை மற்றும் பல்வேறு துறைகள் அடங்கிய குழுக்கள் மூலம், பொதுமக்கள் மூடிய வீட்டினுள் தங்கியிருக்க அறிவுறுத்தப்பட்டது. காலை 9.30 மணிக்கு கிரேட்–2 அவசர நிலை அறிவிக்கப்பட்டு அப்பகுதி பொதுமக்களுக்கு அயோடின் மாத்திரைகள் (ஒத்திகைக்காக சாக்லேட்டுகள்) வழங்கப்பட்டது. காலை 10.10 மணிக்கு கிரேட்–3 அவசர நிலை அறிவிக்கப்பட்டு, மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு இடமாற்றம் செய்யும் பணிகள் ஏற்பாடு செய்யப்பட்டு, காலை 10.35 மணிக்கு போக்குவரத்துக்கழக பேருந்துகளில் பொதுமக்கள் ஏற்றப்பட்டு, காலை 11.12 மணிக்கு செட்டிகுளம் அரசு மேல்நிலைப்பள்ளியில் உள்ள பல்நோக்கு பேரிடர் மைய கட்டடத்திற்கு அழைத்து வரப்பட்டனர். காலை 11.30 மணிக்கு ஒத்திகை முடிவுற்றது. ஒத்திகையின் போது, காவல் துறையினர் மூலம் போக்குவரத்து சீர்செய்யும் பிரிவு, காவல் துறை பிரிவினர், தீயணைப்புத் துறையினர், மருத்துவத் துறையினர், வருவாய் துறையினர் ஒருங்கிணைந்து எவ்வாறு செயல்பட வேண்டும் என்பது குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. கூடங்குளம் அணுமின் நிலைய பகுதியில் காற்று 90 சதவித தினங்கள் கடல்புரமாகவும், 10 சதவிதம் மட்டுமே தரைப்பகுதியில் வீசவும் வாய்ப்புள்ளது. இன்றை ஒத்திகையின் போது பரமேஸ்வரபுரம் கிராம பகுதியிலிருந்து 180 பெண்கள் மற்றும் 40 ஆண்கள் மொத்தம் 220 நபர்கள் வெளியேற்றப்பட்டு, பேரிடர் மைய கட்டடத்திற்கு அழைத்து வரப்பட்டனர். பேரிடர் காலங்களில் செய்யப்படுவதைப் போலவே ஒத்திகை சிறப்பாக நடத்தப்பட்டது. வரும் காலங்களில் ஒவ்வொரு ஆண்டும் இதுபோன்ற ஒத்திகை நடத்தி, இப்பகுதி பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமென தெரிவித்தார்.

ஒத்திகையின் போது, மாவட்ட வருவாய் அலுவலர் திரு.பூ.முத்துராமலிங்கம், சேரன்மகாதேவி சார் ஆட்சியர் திரு.ஆகாஷ்,இ.ஆ.ப., உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு.க.இளம் பகவத்,இ.ஆ.ப., கூடங்குளம் அணுமின் நிலைய முதன்மை கண்காணிப்பாளர் திரு.எஸ்.ஏ.பிள்ளை, மருத்துவ அலுவலர் திரு.அஜெய் துபே, அணு விஞ்ஞானி திரு.பி.பண்டாரம், இராதாபுரம் வட்டாட்சியர் திரு.ரவிக்குமார், தனித்துணை வட்டாட்சியர் திரு.புகாரி, இராதாபுரம் காவல் ஆய்வாளர் திரு. உள்பட அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.